# செப்டம்பர் - 21 - வியாழன்
## நற்செய்தியர் புனித மத்தேயு

**முதல் வாசகம் : ஏபேசியர்4 : 1 – 7**

சகோதர சகோதரிகளே! ஆதலால் ஆண்டவர் பொருட்டு கைதியாக இருக்கும் நான் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன் நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள். முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி,அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழு முயற்சி செய்யுங்கள்.நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பது போல, உடலும் ஒன்றே. தூய ஆவியும் ஒன்றே. அவ்வாறே ஆண்டவர் ஒருவரே் நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே் திருமுழுக்கு ஒன்றே.எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே் அவர் எல்லாருக்கும் மேலானவர் எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர் எல்லாருக்குள்ளும் இருப்பவர்.கிறிஸ்து கொடுக்க விரும்பும் அளவுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள் அளிக்கப் பட்டுள்ளது.

**பதில்பாடல் :** படைப்புகளின் அறிக்கை உலகெங்கும் செய்றடைகின்றது

**நற்செய்தி : மத்தேயு 9 : 9 – 13**

அக்காலத்தில் மத்தேயு என்பவர் சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்ததை இயேசு கண்டார் அவரிடம், ”என்னைப் பின்பற்றி வா” என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார்.பின்பு அவருடைய வீட்டில் பந்தியில் அமர்ந்திருந்தபோது வரி தண்டுபவர்கள், பாவிகள் ஆகிய பலர் வந்து இயேசுவோடும் அவருடைய சீடரோடும் விருந்துண்டனர்.இதைக் கண்ட பரிசேயர் அவருடைய சீடரிடம், ”உங்கள் போதகர் வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன்?” என்று கேட்டனர்.இயேசு இதைக் கேட்டவுடன், ”நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை.”பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்” என்பதன் கருத்தை நீங்கள் போய்க் கற்றுக் கொள்ளுங்கள் ஏனெனில் நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்” என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் நாங்கள் வெளிவேடங்கொண்டவர்களாக அல்லாமல் ஒரே ஆவியானவரை, ஒரே திருமுழுக்கை பெற்றுக்கொண்டு பல உறுப்புக்களாக இருந்தாலும் இயேசுவின் ஒரே உடலில் ஒன்றித்துள்ளோம் என்பதையும் கிறிஸ்துவின் முன்னிலையில் ஒருமனப்பட்டு இருக்க வேண்டும் எனபதையும் தெரிவிக்கின்றது. இன்று எங்களுக்குள் காணப்படும் முக்கிய பிரச்சனையில் ஒன்று வெளிவேடம் கொண்டு வாழ்தலே, ஏனென்றால் எமது, சிந்தனை, செயல் எல்லாம் பல திசைகளில், பல்வேறு வகைகளில் காணப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. நான் மற்றவர்களைிட பெரியவன் ஆகவேண்டும் அவர்கள் என்னைப் பெருமைப்படுத்த வேண்டும், வழிபாடுகளிலோ அல்லது வேறு பக்திக் காரியங்களிலோ முன்னின்று செய்வது, அனுதினமும் இயேசுவோடு இணைந்து செபித்துக்கொண்டே இருக்கின்றேன் என்று வாயார சொல்லியவர்களாக உலக காரியங்களுக்குள் அகப்பட்டு, எமது வாழ்க்கை முறையானது அதே பாவநிலையில்தான் இருக்கின்றது. அவ்வாறு வாழ்ந்தோமானால் எவ்வாறு இயேசுவோடு ஒன்றிக்க முடியும் அவரது உடலில் உறுப்புக்களாய் எவ்வாறு வாழமுடியும். எனவே எங்களை நாங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும், இறை விசுவாசத்தை வளர்க்க வேண்டும் அப்போதுதான் அவர் தங்கும் ஆலயமாகிய எமது உள்ளத்தில் வந்து தங்குவார். நாம் பேசும் பேச்சுக்கள், செய்யும் செயல்கள் (பிறருக்கு உதவி செய்தல், துன்பப்படும் பொழுது ஆறுதல் கூறுதல், நோயுற்றிருக்கும் பொழுது உதவி செய்தல்) அனைத்து காரியங்களும் இறைவனுக்கு ஏற்புடையனவாய் இருக்கும். எனவே இதை உணர்ந்தவர்களாக ஒவ்வொரு மனிதனும் என் நண்பன் ஒவ்வொரு மனிதனும் சகோதரன் என்ற உணர்வுடன் கிறிஸ்துவுக்குள் ஒரே உடலாக மாற்றம் பெறுவோம்.